**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS.. No. | : | 76/2016 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | புஷ்பம் | CASTE | : | |
| W/O | தங்கவேல் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தெத்துார் டி மேட்டுப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.01.2026**

<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்குச்சொத்து பொதுச்சொத்து என்றும் அதை சீனி என்ற சிவகுருவன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி எங்களின் அண்ணன், எனக்கு அவர்மட்டும்தான் சகோதரர். எனது அப்பா இறந்தபின் எனக்கும் 2ம் வாதிக்கும் செய்முறைகளை 1ம் பிரதிவாதி செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பல இடங்களில் கடன் வாங்கியிருந்தார் என்றால் எனக்குத்தெரியாது. 4ம் பிரதிவாதி எங்கள் நிலத்தில் உழுது விதைக்க முயற்சி செய்தார் அதை தடுத்துவிட்டோம், அதனால் அவரை வழக்கில் சேர்த்துள்ளோம்.

2. 4ம் பிரதிவாதி எந்த வருடம் எங்கள் நிலத்தை உழ முயற்சி செய்தார் என்று ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி வழக்கு 1ம் அயிட்ட சொத்தில் ஒரு பங்கை பொறுத்து கிரையஒப்பந்தம் 4ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்தி அதை பதிவு செய்துள்ளார் என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி சொத்திற்காக 1ம் பிரதிவாதி பணம் வாங்கினாரா என்று எனக்குத்தெரியாது. தற்போது மேற்படி சொத்து 4ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கும் 4ம் பிரதிவாதிக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்தபின்தான் ஏற்பட்டது.

3. 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்ட அவரது தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் நான் பாகப்பிரிவினை கேட்கமுடியாது என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.